


இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 85 – ஒலி : 17 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஆவணி 10 – வியாழக்கிழமை 27 ஆகஸ்ட் 2026 – கோவை ★★ 10 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 85 - Issue 17 : Thiruvalluvar Year - 2057 - Aavani 10 - Thursday 27 August 2026 - Kovai ★★ 10 Pages ₹ 5.00


## கர்நாடகாவில் 3 தமிழர்கள் சித்திரவதை செய்து படுகொலை!

# நீதி கிடைக்க தமிழ்நாடு அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

## சட்டப்பேரவையில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கேள்வி!

**சென்னை, ஆக. 27 -**

**சட்டப்பேரவையில், நேற்று முன்தினம் கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் பேசிய எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், “கர்நாடகாவில் 3 தமிழர்கள் திட்டமிட்டு சித்திரவதை செய்து படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள். இச்சம்பவத்தில் நீதி கிடைக்க தமிழ்நாடு அரசு எடுத்த நடவடிக்கை என்ன?” என கேள்வி எழுப்பினார்.**

கர்நாடக மாநிலத்தில், வனத்துறையினரால் 3 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டது தொடர்பாக, சட்டப்பேரவையில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் பேசியதாவது:-

**அதிர்ச்சிதரும் போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட்!**

பேரவைத் தலைவர் அவர்களே, கர்நாடகா மாநிலத்தில், ஹனூர் அருகே அந்தோணிசாமி, ஜான் ரோஸ் பீட்டர், குமார் ஆகிய மூன்று தமிழர்கள் அந்த மாநில வனத்துறையினரால் கடந்த 15 ஆம் தேதி அதிகாலையில் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள். சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்கள். ஏற்கனவே, இந்த அவையின் கவனத்துக்கு எடுத்து வந்துள்ளோம்.



சுட்டுக்கொல்லப்பட்ட அந்த மூன்று தமிழர்களின் உடற்கூறு ஆய்வறிக்கை (போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட்) இன்று வெளிவந்துள்ளது. அதில் மூன்று பேருமே சித்திரவதை செய்யப்பட்டு, மிக அருகில் நிற்க வைக்கப்பட்டு, சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்கள் என்று அந்த போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட் மூலமாக தெரிய வந்துள்ளது.

மூன்று பேருக்கும் உடல் முழுக்க படுகாயம் இருந்திருக்கிறது. விலா எலும்பு முறிக்கப்பட்டுள்ளது என்று போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட் தெளிவாகச் சொல்கிறது. எனவே, இது முழுக்க முழுக்க ஒரு படுகொலை. இந்தப் படுகொலைக்கு எதிராக இந்த ஆட்சி என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகின்றேன்.

**கர்நாடக அரசுக்குக் கண்டனம்!**

குறைப்பட்சம் அந்த மாநில அரசிடம் விளக்கம் கேட்டு கடிதம் எழுதியிருக்கிறதா? கடந்த வாரம், கர்நாடகா முதலமைச்சர் தென் மாநில முதலமைச்சர் மாநாட்டுக்காக இங்கு வந்தார். அப்போது நேரிலாவது தமிழ்நாடு அரசு, தன் கண்டனத்தைத் தெரிவித்திருக்கிறதா? கர்நாடக மாநில காவல்துறைக்குப் பதிலாக, ஒரு மேல்மட்ட நீதி விசாரணை செய்ய தமிழ்நாடு அரசு வலியுறுத்த வேண்டும் என்று, இந்த அவையில் ஏற்கனவே வலியுறுத்தியுள்ளேன். அது சம்பந்தமாக இந்த மாநில முதலமைச்சரால் ஏதாவது அழுத்தம் கொடுக்கப்பட்டதா?

**இறந்தவர்களின் குடும்பங்களை முதல்வர் சந்திக்காதது ஏன்?**

இந்தப் பிரச்சினை நடந்தவுடன் முதலமைச்சரோ, அமைச்சரவையில் இருப்பவர்களோ, கர்நாடகா சென்று, இறந்தவர்களின் குடும்பத்துக்கு ஆறுதல் சொல்லியிருக்க வேண்டும். மூன்று தமிழர்களின் மரணத்துக்கு நீதி கிடைக்க தமிழ்நாடு அரசு முழு முயற்சி எடுக்க வேண்டும். அவர்கள் குடும்பத்துக்குத் தேவையான நிதியுதவியையும், சட்ட உதவியையும் அரசு செய்ய வேண்டும் என்று உங்கள் கவனத்துக்குக் கொண்டு வருகிறேன்.

இவ்வாறு சட்டப்பேரவையில், எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

### பரந்தூர் விமான நிலையத் திட்டத்திற்காக

## கையகப்படுத்தப்பட்ட 90 சதவீத நிலங்களின் நிலை என்னவாகும்?

### ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ ஆங்கில நாளேடு – த.வெ.க, அரசுக்கு சரமாரி கேள்வி!

**சென்னை, ஆக. 27 -**

**பரந்தூர் விமான நிலையத் திட்டத்திற்காக 90 சதவீத நிலம் கையகப்படுத்தப்பட்ட நிலையில், அந்த நிலங்களின் நிலை என்னவாகும்? என த.வெ.க. அரசுக்கு ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ ஆங்கில நாளேடு கேள்வி எழுப்பியுள்ளது.**

காஞ்சிபுரம் மாவட்டம் பரந்தூரில் புதிய பசுமைவெளி விமான நிலையம் அமைக்கும் திட்டம் முந்தைய தி,மு,க, அரசால் கொண்டு வரப்பட்டது. பெருகி வரும் விமானப் பயணிகளின் எண்ணிக்கை மற்றும் விமான சரக்கு போக்குவரத்து, எதிர்காலத் தேவை போன்றவற்றின் அடிப்படையில், சென்னைக்கு 2வது விமான நிலையம் அவசியம் என்பதை உணர்ந்து, பரந்தூர் விமான நிலையத் திட்டம் தி.மு.க. அரசால் உருவாக்கப்பட்டது.

இந்நிலையில், அரசியல் காரணங்களுக்காக இத்திட்டத்தை த.வெ.க. அரசு கைவிட்டுள்ளது. இது அரசுக்கு பெரும் நிதி இழப்பை ஏற்படுத்தும் என்பதோடு மட்டுமல்லாமல், மாநில வளர்ச்சியைப் பல ஆண்டுகள் பின்னுக்குத் தள்ளிவிடும். நிலம் கையகப்படுத்துவது நிறைவடையும் தருவாயில் உள்ள நிலையிலும், பலகட்டப் பணிகள், ஒப்புதல்கள் நிறைவடைந்த நிலையி லும், த.வெ.க. அரசு எடுத்திருக்கும் இந்த முடிவு தமிழ்நாட்டு இளைஞர்களின் வேலை வாய்ப்புக் கனவுகளைத் தகர்க்கும் பேரிடியாக அமைந்துள்ளது.

இந்நிலையில், பரந்தூர் விமான நிலையம் திட்டத்தை கைவிட்ட த.வெ.க. அரசுக்கு ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ ஆங்கில நாளேடு சரமாரி கேள்விகளை எழுப்பியுள்ளது. பரந்தூர் விமான நிலையத் திட்டத்திற்காக 90சதவீதம் நிலம் கையகப்படுத்தப்பட்ட நிலையில், அந்த நிலங்களின் நிலை என்னவாகும்? என்று கேள்வி எழுப்பியுள்ளது.

பரந்தூரில் புதிய விமான நிலையம் அமையவிருந்த சூழலைக் கருத்தில் கொண்டு தொடங்கப்பட்ட பல வீட்டுவசதித் திட்டங்களும் முதலீடுகளும் என்னவாகும்? பரந்தூரில் புதிய விமான நிலையம் இல்லை என்றால், வேறு எங்கு புதிய விமான நிலையம் அமைக்க முடியும்? என்று அடுக்கடுக்காக பல கேள்விகளை எழுப்பியுள்ளது.

தொழில் முதலீடுகளில் போட்டி போடும் சென்னைக்கு இரண்டாவது விமான நிலையம் மிகவும் அவசியம் தானே என்று ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ ஆங்கில நாளேடு தெரிவித்துள்ளது.

பரந்தூரில், கையகப்படுத்தப்பட்ட நோக்கத்தைத் தவிர்த்து வேறு தேவைகளுக்கு அந்நிலத்தைப் பயன்படுத்துவது சட்ட சிக்கல்களை ஏற்படுத்தும். புதிய விமான நிலையத்திற்கு, விவசாய நிலங்கள், நீர்நிலைகள், தொழிற்சாலைகள் மற்றும் குடியிருப்புகள் இல்லாத 5,000 ஏக்கர் நிலப்பரப்பைக் கண்டறிவது சவாலானது.

புதிய விமான நிலையம், சென்னை நகரத்திலிருந்து தொலைவில் அமைவதுதான் சிறந்தது; அப்போதுதான் அதைச் சுற்றி புதிய நகரத்தை உருவாக்க முடியும் என்று ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ ஆங்கில நாளேடு தெரிவித்துள்ளது.

---

## தீவிரமடையும் தென்மேற்கு பருவமழை!

*புதுடெல்லி, ஆக. 27 -*

*இந்தியாவில் சில நாட்கள் ஓய்வுக்குப் பிறகு தென்மேற்கு பருவமழை மீண்டும் தீவிரமடையத் தொடங்கியுள்ளது. நாட்டின் கிழக்கு மற்றும் மத்தியப் பகுதிகளில் திரண்டுள்ள பெரும் மேகக் கூட்டங்களை இந்தியாவின் மேம்படுத்தப்பட்ட INSAT3DS வானிலை செயற்கைக் கோள் துல்லியமாகப் படம்பிடித்து அனுப்பியுள்ளது. இதன் மூலம் அடுத்த சில நாட்களுக்கு நாட்டின் பல மாநிலங்களில் கனமழை பெய்யக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

*செயற்கைக்கோளின் தெர்மல் அகச்சிவப்பு படங்கள், வங்கக் கடலின் வடபகுதியிலிருந்து தொடங்கி ஒடிசா, சத்தீஸ்கர், மத்தியப் பிரதேசம் மற்றும் இந்தோ கங்கைச் சமவெளி வரை பரந்து விரிந்த அடர்ந்த மேகக் கூட்டங்களைக் காட்டுகின்றன.*

*ஆழமான வெப்பச் சலனம் காரணமாக உருவாகியுள்ள இந்த ‘கியுமுலோநிம்பஸ்’ ரக மேகங்கள், இடி மின்னலுடன் கூடிய மிகக் கன மழையை உருவாக்கும் திறன் கொண்டவை.*

---

## பீகார் - அரசுத் தேர்வு வினாத்தாள் கசிவு!

### மாணவர்கள் பேரணி!

*பாட்னா, ஆக. 27 -*

*பீகாரில் நடந்து முடிந்த 70வது பி.பி. எஸ்.சி. தேர்வில் முறைகேடு மற்றும் வினாத்தாள் கசிவு நடந்ததாக குற்றம்சாட்டி மாணவர்கள் காந்தி மைதானத்தில் இருந்து முதல்வர் இல்லம் நோக்கி நேற்று முன்தினம் தங்கள் பேரணியை தொடங்கினர்.*

*செல்லும் வழி நெடுகிலும் கோஷங்களை எழுப்பிய வண்ணம் சென்ற அவர்கள் போலீசாரால் போடப்பட்ட தடுப்புகளை தாண்டி செல்ல முயன்றனர்.*

*மாணவர்ளை தடுக்க அங்கு குவிக்கப்பட்ட போலீசார் மற்றும் மத்திய படையினர் முயன்று வருகின்றனர். மாணவர்கள் மீது தண்ணீரை பீய்ச்சி அடித்து போலீசார் தடுக்க முயன்ற போதும் அவர்கள் முதலமைச்சர் இல்லத்தை நெருங்கியதால் பதற்றமான சூழல் ஏற்பட்டது.*

*முன்னதாக நேற்று முன்தினம் போராட்டக் குழு மாணவர்களின் பிரதிநிதிகளிடம் பீகார் என்.டி.ஏ. அரசு பேச்சு வார்த்தை நடத்திய நிலையில் அதில் தீர்வு எட்டப்படாததால் நேற்று பேரணி நடத்தப்பட்டது.*